**கென்ய அதிபர் உஹுரு கென்யட்டாவிற்கு பிரதமர் அனுப்பிய கடிதம்**

செப்டம்பர் 22, 2013

நைரோபியில் நடைபெற்ற பயங்கரவாதத் தாக்குதலை பிரதமர் மிகவும் கடுமையாக கண்டித்து தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து கென்ய அதிபருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அந்த கடிதத்தில் பிரதமர் குறிப்பிட்டு இருப்பதாவது

“மேதகு அதிபர் அவர்களே,

நைரோபியில் வெஸ்ட்கேட் மாலில் நேற்று நடைபெற்ற மனிதத்தன்மையற்ற பயங்கரவாதத் தாக்குதல் குறித்து நான் ஆழ்ந்த அதிர்ச்சிக்குள்ளானேன். தீவிர கவலைக்குள்ளானேன். இந்த சம்பவம், பயங்கரவாதம் என்ற தொடர் தொல்லை வெல்ல முடியாத சவாலாக, உலகளாவிய சமுதாயம் ஒருங்கிணைந்து நீடித்த முயற்சியில் வெற்றி கொள்ள வேண்டிய சவால் என்பதை உண்மையாக நினைவுபடுத்தும் வகையில் உள்ளது. நம் இரு நாடுகளின் மக்கள் உள்ளிட்ட ஏராளமான அப்பாவிகளின் உயிரைக்குடித்த இந்த மனிதாபிமானமிக்க மற்றும் விவேகமற்ற தாக்குதலை இந்தியா மிகவும் கடுமையான முறையில் கண்டிக்கிறது.

இந்த துயரமான தருணத்தில் உங்களுடனும் உங்கள் அரசு மற்றும் கென்ய மக்களுடன் இந்தியா தன் ஒருமைப்பாட்டை தெரிவிக்கிறது. பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு எங்களுடைய இதயபூர்வமான இரங்கலைத் தெரிவிக்கவும். காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய எங்கள் வாழ்த்துக்களை தெரிவிக்கவும். இந்த துயர சம்பவத்தை தாங்கிக்கொள்ளவும் எதிர்கொள்ளவும் தேவையான மனவலிமை உங்களுக்கும் கென்ய மக்களுக்கும் இருக்கும் என்பதை நான் உறுதியாக நம்புகிறேன். உங்கள் முயற்சிகளில் உங்களுக்கு உதவ நாங்கள் தயாராக உள்ளோம்.

மேதகு அதிபர் அவர்களே என்னுடைய மேலான உறுதிமொழியை தயவு கூர்ந்து ஏற்றுக்கொள்ளுங்கள்

**புது தில்லி**
**செப்டம்பர் 22, 2013**